இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 28-03-2024

# பத்திரங்களுக்குப் பின்னால்...!

தேர்தல் பத்திரங்களைத் தோண்டத் தோண்ட புது புது பூதம் கிளம்பிக் கொண்டே இருக்கிறது!

காங்கிரஸ் கட்சியும், ஆம் ஆத்மி கட்சியும் இது தொடர்பாக வைத்துள்ள பகிரங்க குற்றச்சாட்டுகளுக்கு இதுவரை பா.ஜ.க. தலைமையோ உள்துறை அமைச்சர் அமித்ஷாவோ பதில் சொல்லவில்லை.

**“மதுபான வழக்கு குற்றவாளியிடம் இருந்து ரூ.55 கோடி நன்கொடை பெற்ற பா.ஜ.க. தலைவர் நட்டாவை அமலாக்கத்துறை கைது செய்ய வேண்டும்”** என்று கோரிக்கை வைத்துள்ளது ஆம் ஆத்மி கட்சி.

**“மதுபான முறைகேடு புகாரில் கைது செய்யப்பட்ட அரவிந்தோ ஃபார்மா இயக்குனரிடம் பா.ஜ.க. ரூ.55 கோடி தேர்தல் நன்கொடை பத்திரத்தை பெற்றுள்ளது. ரூ.55 கோடிக்கு பா.ஜ.க.வுக்கு தேர்தல் பத்திரம் வழங்கிய பின்னர் அரவிந்தோ ஃபார்மா இயக்குனர் ஜாமீனில் விடுவிக்கப் பட்டிருக்கிறார் . மதுபான வழக்கு குற்றவாளியிடம் இருந்து ரூ.55 கோடி நன்கொடை பெற்றது குறித்து பிரதமர் மோடியும், பா.ஜ.க. தலைவர் நட்டாவும் விளக்கம் அளிக்க வேண்டும். இது குறித்து அமலாக்கத்துறையும் விளக்கம் அளிக்க வேண்டும்”** என்று - ஆம் ஆத்மி கட்சி கோரிக்கை வைத்துள்ளது.

மதுபானக் கொள்கை வழக்கு தொடர்பாக டெல்லி முதலமைச்சர் கைது செய்யப்பட்டுள்ளார். துணை முதலமைச்சர் 13 மாதமாக சிறையில் இருக்கிறார். ஆனால் அது தொடர்பாக குற்றம் சாட்டப்படும் நிறுவனத்திடம் இருந்து பா.ஜ.க. நன்கொடைப் பெற்றுள்ளதை ஆம் ஆத்மி கட்சி அம்பலப்படுத்தி உள்ளது.

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும் ஒன்றிய முன்னாள் அமைச்சருமான ஜெய்ராம் ரமேஷ் வைத்துள்ள குற்றச்சாட்டுகள் இதை விட பகிரங்கமானவை.

“கருப்பு பணத்தை ஒழிப்பேன் என்று உறுதி அளித்த பிரதமர் மோடி, ஊழலைச் சட்டப் பூர்வமாக்கி விட்டு இப்போது அதனை மறைக்க முயற்சி செய்கிறார். இந்த அப்பட்டமான ஊழல், நான்கு வழிமுறைகளில் நடந்துள்ளன.

* முதலாவதாக, ‘நன்கொடை கொடு, வாய்ப்பைப் பெறு’. அதாவது, ப்ரீப் பெய்டு லஞ்சம்.

* இரண்டாவதாக, ‘ஒப்பந்தம் பெறு, லஞ்சம் கொடு’. அதாவது போஸ்ட் பெய்டு லஞ்சம்.

* மூன்றாவது வழிமுறை என்பது ‘ஹாஃப்தா வசூல்’. அதாவது ரெய்டுக்கு பின்னர் லஞ்சம். முதலில் நிறுவனங்களுக்கு சோதனை செய்ய அமலாக்கத் துறை, சி.பி.ஐ. அனுப்பப்படும், அதிலிருந்து தப்பிக்க அந்த நிறுவனம் தேர்தல் பத்திரங்கள் வழங்கும்.

* நான்காவது, ஷெல் நிறுவனங்களின் பயன்பாடு.

தேர்தல் பத்திரங்கள் வழியாக நன்கொடை வழங்கியதன் மூலம் 38 கார்ப்பரேட் நிறுவனங்கள், 179 முக்கியமான ஒப்பந்தங்கள் மற்றும் திட்டங்களை ஒன்றிய மற்றும் பா.ஜ.க. ஆளும் மாநில அரசுகளிடம் இருந்து பெற்றுள்ளது பகுப்பாய்வின் மூலம் தெரிய வந்துள்ளது. இந்த நிறுவனங்கள் பா.ஜ.க.வுக்கு தேர்தல் பத்திரங்கள் மூலமாக ரூ.2,004 கோடி நன்கொடை வழங்கியதன் மூலமாக மொத்தம் ரூ.3.8 லட்சம் கோடி மதிப்புள்ள திட்டங்கள் மற்றும் ஒப்பந்தங்களைப் பெற்றுள்ளன.

41 கார்ப்பரேட் நிறுவனங்கள் மொத்தமாக 56 முறை, அமலாக்கத் துறை, சி.பி.ஐ., வருமான வரித் துறை சோதனைகளுக்கு ஆளாகியுள்ளன. இந்நிறுவனங்கள் பா.ஜ.க.வுக்கு ரூ.2,592 கோடி கொடுத்துள்ளன. இதில் ரூ.1,853 கோடி விசாரணை அமைப்புகளின் சோதனைக்குப் பின்னர் கொடுக்கப்பட்டுள்ளது” என்று ஜெய்ராம் ரமேஷ் குற்றம்சாட்டி இருக்கிறார்.

**“இந்த மக்களவைத் தேர்தலில் இண்டியா கூட்டணி வெற்றி பெற்று ஆட்சியமைத்தால், தேர்தல் பத்திர ஊழலை விசாரிக்க சிறப்புப் புலனாய்வுக் குழு அமைக்கப்படும். அதானி விவகாரத்தை விசாரிக்க கூட்டு நாடாளுமன்றக் குழு அமைக்கப்படும். அதேபோல், பி.எம். கேர்ஸ் ஃபண்ட் குறித்து சிறப்புக் குழு மூலம் விசாரிக்கப்படும்”** என்றார் அவர். இவை அனைத்தும் பா.ஜ.க.வின் ஊழல் பாதைகள் ஆகும்.

வார்த்தைக்கு வார்த்தை பதில் சொல்லக் கூடிய பா.ஜ.க.வின் செய்தித் தொடர்பாளர்கள் வாய்மூடிக் கிடக்கிறார்கள். பதில் அளிக்க முடியவில்லை.

கடந்த சனவரி மாதமே இது தொடர்பான ரகசியங்கள் ஆங்கிலச் செய்தி இணையதளங்கள் மூலமாகக் கசிந்தன. 2018-19 முதல் 2022-23 நிதியாண்டு வரையிலான தேர்தல் ஆணைய ஆவணங்கள், வழக்கு விவரங்கள், நிதி அறிக்கைளை ஆய்வு செய்து இதனை வெளிப்படுத்தியது.

**“கடந்த 2018-19 முதல் 2022-23 நிதியாண்டு வரை பா.ஜ.க.வுக்கு நிதியளித்த நிறுவனங்கள் பட்டியலை பரிசீலித்ததில் அதில் 30 நிறுவனங்கள் மீது அதே காலகட்டத்தில் ஒன்றிய அரசின் ஈ.டி., ஐ.டி., சி.பி.ஐ. ரெய்டு நடத்தியுள்ளது. இந்த 30 நிறுவனங்களும் மொத்தம் ரூ.335 கோடியை பா.ஜ.க.வுக்கு தேர்தல் நிதியாக தந்துள்ளன. இதில் 23 நிறுவனங்கள் ரெய்டு நடத்தப்படும் வரை பா.ஜ.க.வுக்கு ஒரு பைசா கூட தேர்தல் நிதி தந்தது இல்லை. ரெய்டு நடத்தப்பட்டதும் அந்த 23 நிறுவனங்களும் பா.ஜ.க.வுக்கு நிதி தர ஆரம்பித்துள்ளன. மொத்தம் ரூ.187.58 கோடி நிதியை அந்த நிறுவனங்கள் பா.ஜ.க.வுக்கு வாரி வழங்கி உள்ளன. 4 கம்பெனிகளில் ரெய்டு நடத்தப்பட்ட 4 மாதத்துக்குள் பா.ஜ.க.வுக்கு நிதி தந்துள்ளன. பா.ஜ.க.வுக்கு ஏற்கனவே குறைவாக நிதி தந்த 6 நிறுவனங்கள் மீது ரெய்டு நடத்தப்பட்டுள்ளது. அடுத்த சில மாதங்களிலேயே அந்த நிறுவனங்கள் பல மடங்கு அதிக நிதியை பா.ஜ.க.வுக்கு கொடுத்துள்ளன. தொடர்ந்து பல ஆண்டுகளாக பா.ஜ.க.வுக்கு நிதி தந்த நிறுவனங்கள் திடீரென நிதி தருவதை நிறுத்திவிட்டால் கூட ரெய்டு நடத்தப்பட்டுள்ளது. இப்படி 6 நிறுவனங்களை ஈ.டி., ஐ.டி., சி.பி.ஐ. அதிகாரிகள் சோதனையிட்டுள்ளனர். ரெய்டு நடந்து கொண்டிருக்கும் போதே சில நிறுவனங்கள் பா.ஜ.க.வுக்கு நிதி தந்ததும் தெரியவந்துள்ளது. நன்கொடை தந்த 3 நிறுவனங்களுக்கு ஒன்றிய அரசிடம் இருந்து லைசென்ஸ் உள்ளிட்ட சலுகைகள் கிடைத்துள்ளது”** என்று அவை வெளியிட்டன. இவையும் இதுவரை பா.ஜ.க.வால் மறுக்கப்படவில்லை.

இதைப்பற்றி எல்லாம் கேள்வி கேட்டால், ‘இவை அனைத்தும் கற்பனை’ என்கிறார் ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன். பா.ஜ.க.வின் முகத்திரையை கிழித்திருக்கிறது தேர்தல் பத்திரங்கள். கிழிக்கப்பட்ட பத்திரங்களுக்கு பின்னால் பா.ஜ.க.வின் ஊழல் முகம் கோரமாகத் தெரிகிறது.

## பெரம்பலூர் நாடாளுமன்றத் தொகுதியில்

# வளர்ச்சி திட்டங்கள் செயல்படுத்த தி.மு.க.வுக்கு ஆதரவு தாருங்கள்!

## கிராமம் கிராமமாகச் சென்று அமைச்சர் கே.என்.நேரு - அருண்நேரு பிரசாரம்!

*முசிறி, மார்ச், 28-*

திருச்சி மாவட்டம், தா.பேட்டை ஒன்றியத்தில் பெரம்பலூர் நாடாளுமன்ற தொகுதி தி.மு.க. உறுப்பினர் அருண் நேருவிற்கு ஆதரவாக அமைச்சர் கே.என். நேரு பிரச்சாரம் செய்து ஆதரவு திரட்டினார்.

முசிறி சட்டமன்ற தொகுதி தா.பேட்டை ஒன்றியம் பாப்பாபட்டி கிராமத்தில் தி.மு.க. வேட்பாளர் அருண்நேரு தேர்தல் பிரச்சாரத்தை தொடங்கினார். நிகழ்ச்சிக்கு வடக்கு மாவட்டச் செயலாளரும், முசிறி தொகுதி எம்.எல்.ஏ.வுமான காடுவெட்டி தியாகராஜன் தலைமை வகித்தார். கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாகத்துறை துறை அமைச்சருமான கே.என்.நேரு கலந்துகொண்டு கழக அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார்.

அப்போது கே.என். நேரு பேசியதாவது:

தமிழக முதல்வர் தேர்தல் வாக்குறுதியில் அளித்த ஒவ்வொரு திட்டங்களையும் நிறைவேற்றி வருகிறார்.

அந்த வகையில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் மற்றும் காவிரி கூட்டுக் குடிநீர் திட்டங்கள் நிறைவேற்றப் பட்டு வருகிறது.

கடந்த அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் புளியஞ்சோலையில் இருந்து மகாதேவிக்கு கால்வாய் திட்டம் செயல்படுத்தப்படும் என அப்போதைய அ.தி.மு.க. அமைச்சர் அண்ணாவி கூறியிருந்தார். அந்த திட்டம் அப்படியே கிடப்பில் போடப்பட்டது.

புளியஞ்சோலை கால்வாய் திட்டம் நிறைவேற்றிக் கொடுத்து, தா.பேட்டை ஒன்றியம் விவசாயத்தில் வளம் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும் கடந்த இரண்டு ஆண்டு காலத்தில் புதிய பேருந்து நிலையங்கள், மார்க்கெட், ஆரம்ப சுகாதார நிலையங்கள், கால்நடை மருத்துவமனை, உள்ளிட்ட எண்ணற்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. புதிய பாலங்கள், சாலைகள் அமைத்துத் தரப்பட்டுள்ளது.

தமிழக முதல்வர் கூறியது போல திருச்சி மாவட்டத்திற்கு மட்டும் சுமார் 1000 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இப்பகுதி சட்டமன்ற உறுப்பினரான காடுவெட்டி தியாகராஜர் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் அவர் இப்பகுதி மக்களுக்காக கேட்கும் கோரிக்கைகளை எல்லாம் தமிழக அரசு செய்து தருகிறது.

கடந்த 40 ஆண்டுகளாக உங்களோடு மக்கள் பணியில் என்னை இணைத்துக் கொண்டு முழு நேரமாக செயல்பட்டு வருகிறேன். எட்டு முறை தேர்தலில் போட்டியிட்டு உள்ளேன். தொடர்ந்து என்றும் உங்களுக்கு பணியாற்ற காத்திருக்கிறோம். என்றும் உங்கள் சேவகனாக இருப்பேம்.

மத்திய அரசின் திட்டங்களையும், நிதிகளையும் முழுமையாக நமது பகுதிக்கு பெறுவதற்கு நாடாளுமன்ற வேட்பாளராக போட்டியிடும் நமது தி.மு.க. வேட்பாளர் அருண் நேருவிற்கு நீங்கள் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வேண்டும் என்று பேசினார். வேட்பாளர் அருண் நேரு பேசும்போது இப்பகுதியில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் வகையில் தொழிற்சாலைகள் அமைந்திட பாடுபடுவேன். குறிப்பாக மத்திய மாநில அரசுகளின் நிதியோடு கொண்டு வரப்படும் தொழிற்சாலைகள் நகர்ப்புறங்களை சார்ந்து மட்டும் அமையாமல் கிராமப்புற இளைஞர்களும் வேலை வாய்ப்பு பெற்று பயன்பெறும் வகையில் திட்டங்களை செயல்படுத்த நீங்கள் உதய சூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும். உங்களின் தேவைகளை நிறைவேற்றவும், நாடாளுமன்றத்தில் நான் குரல் கொடுக்கவும் உங்கள் வீட்டுப் பிள்ளையான எனக்கு நீங்கள் ஆதரவு தர வேண்டும் என்று பேசினார்.

பிரச்சார நிகழ்ச்சி துவக்க விழாவின்போது மாநகராட்சி மேயர் அன்பழகன், ஒன்றிய செயலாளர் கருப்பையா ராமச்சந்திரன், பெரியசாமி, திருஞானம், கே.கே.ஆர்.சேகரன்,

தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆப்பிள் கணேசன், சீனிவாச பெருமாள் மாவட்ட துணை செயலாளர் மயில்வாகனன், காங்கிரஸ் மாவட்ட தலைவர் கலை, காங்கிரஸ் தொகுதி பொறுப்பாளர் சுஜாதா, விடுதலை சிறுத்தைகள் கட்சி கலைச்செல்வன், கம்யூனிஸ்ட் சுப்பிரமணியன், முன்னாள் ராணுவத்தினர் பிரிவு மாநில செயலாளர் கேப்டன் சுபாஷ்ராமன் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

## சிதம்பரம் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் கூட்டணி கட்சி வேட்பாளர்

# தொல். திருமாவளவனை அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்வோம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேச்சு!

*அரியலூர், மார்ச் 28-*

அரியலூர் மாவட்டம் சிதம்பரம் நாடாளுமன்றத் தொகுதி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான ‘இந்தியா’ கூட்டணி கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் எழுச்சி தமிழர் தொல்.திருமாவளவன் அவர்கள் அறிமுக கூட்டம் மற்றும் மாவட்ட செயல்வீரர்கள் கூட்டம் அரியலூர் அன்னலட்சுமி திருமண மண்டபத்தில் மாவட்டக் கழகச் செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில் நடைபெற்றது.



நடைபெற்ற கூட்டத்தில் சிதம்பரம் நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்ட குன்னம் சட்டமன்ற தொகுதி, அரியலூர் சட்டமன்ற தொகுதி, ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதி செயல்வீரர்கள் அறிமுகம், சிதம்பரம் நாடாளுமன்ற தொகுதி வேட்பாளர் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் அவர்களை அறிமுகம் செய்து அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசியதாவது:-

மண்ணைக்காக்கின்ற, மொழியை காக்கின்ற இனத்தின் அடையாளத்தை காக்கின்ற போராக இந்த தேர்தலை கருத வேண்டும் என பேசினார்,

தொடர்ந்து அமைச்சர் பேசுகையில், நம்மை திசைத்திருப்ப பல்வேறு பொய்ச்செய்திகள் பரப்பி நம்மை திசை திருப்ப பார்ப்பார்கள் எதிரணியில் உள்ளவர்கள் நாம் அவற்றிக்கு திசைத் திரும்பாமல் தேர்தல் பணியாற்ற வேண்டும். சிதம்பரம் நாடாளுமன்றத் தேர்தலில் திருமாவளவன் அவர்கள் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்திட வேண்டும்,

பிற்படுத்தப்பட்டோரின் இட ஒதுக்கீட்டை பா.ஜ.க. பறிக்க முயன்றபோது அதற்காக தொடர்ந்து பிற்படுத்தப்பட்டோரின் உரிமைக்காக பாராளுமன்றத்தில் குரல் எழுப்பி போராடினார் அண்ணன் திருமாவளவன், இட ஒதுக்கீடு இருக்க கூடாது என நினைக்கும் பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்திருப்பவர்கள் மக்களுக்கு எதுவும் செய்ய போவதில்லை, மக்களை பற்றி கவலைப் படபோவதும் இல்லை, நாடாளுமன்றத்தில் சமூக நீதியின் குரலாக இருக்கிறார். தனது வாழ்வை சமூகத்திற்கு அர்ப்பணித்தவர் அண்ணன் திருமாவளவன் அவர்கள் ஈழத் தமிழர்களுக்காக தொடர்ந்து குரல் கொடுத்துவருபவர், ஈழத்திற்கே நேராகச் சென்று அங்கு ஈழத்தமிழருக்காக போராடியவர்தான் திருமாவளவன் அவர்கள் திருமாவளவன் அவர்கள் வெற்றி பெற்றால் களத்திலும், வெற்றிபெறா விட்டால் எனக்கென்ன என அவர் ஒருபோதும் நினைத்தது இல்லை தொடர்ந்து அனைத்து மக்களுக்காவும்,சமூக நீதிக்காவும், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்காக உழைத்து வருகிறார், மக்களவையில் திருமாவளவன் குரல் ஒலிக்கிறது என்றால் அது அனைத்து மக்களுக்குமான குரலாகும். திருமாவளவன் அவர்கள் வெற்றி முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் வெற்றி, கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வெற்றி, இந்தியா கூட்டணியின் வெற்றி சமூக நீதியின் வெற்றி ஆகையால் கழகத் தோழர்களும், கூட்டணி கட்சி தோழர்களும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தோழர்களும் அனைவரும் இன்று முதல் அல்லும் பகலும் அயராது அவரது வெற்றிக்காக உழைத்திட வேண்டும் என பேசினார்.

சிதம்பரம் பாராளுமன்ற தொகுதி வேட்பாளரும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவருமான தொல். திருமாவளவன் பேசியது:

சிதம்பரம் மக்களவைத் தொகுதியில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி வெற்றிப்பெற தி.மு.க. காட்டும் வழியில் விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் பயணிக்க வேண்டும். அனைத்து பொறுப்பாளர்களும் தங்களது கட்சிப் பொறுப்பை மறந்து தீவிர வாக்கு சேகரிக்கும் தொண்டர்களாக பணியாற்ற வேண்டும். அவரவருக்கு பணி வழங்கப்பட்ட இடங்களில் பணியாற்ற வேண்டும். எதிரணியினர் நம்மை கோபப்படுத்தி பார்ப்பார்கள், நமது வழியை மாற்றியமைக்க திட்டமிடுவர். இணையத்தில் பல்வேறு கருத்துகளை பரப்பலாம். அவற்றை யாரும் கண்டுக்கொள்ள வேண்டாம். தமிழகத்தில் பிரதான எதிர்க்கட்சி அ.தி.மு.க. ஆனால் நாம் தற்போது எதிர்க்க வேண்டியது பா.ஜ.க. அணியை இந்த தேர்தலில் அ.தி.மு.க.வை பொருட்டாக கருத வேண்டாம். இந்தியாவை பாதுகாக்க வேண்டிய நிலையில் நாம் உள்ளோம். இந்தியாவை பாதுகாக்க பா.ஜ.க.வை வீழ்த்த வேண்டும். தமிழகம் போல கர்நாடகம், ஆந்திரா, கேரளா, பஞ்சாப், டெல்லி என பல்வேறு மாநிலங்களிலும் பா.ஜ.க.வுக்கு எதிராக இந்த அணி உள்ளது. இவ்வாறு பல மாநிலங்களில் இந்தியா கூட்டணி வெற்றி பெறும் போது பா.ஜ.க. நிச்சயம் வீட்டுக்கு சென்றுவிடும். பா.ஜ.க.வை வீட்டுக்கு அனுப்ப முதல் வியூகத்தை அமைத்தவர் தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் மு.க. ஸ்டாலின் அவர்கள் அதனாலேயே தி.மு.க.வுடன் விடுதலை சிறுத்தைகள் கட்சிகள் தொடர்ந்து பயணிக்கிறது. அப்போது

காவிரி நீருக்காக அமைக்கப்பட்ட இந்த கூட்டணி இன்றும் தொடர்கிறது.

2009 ம் ஆண்டு முள்ளிவாய்க்கால் பிரச்சினையின் போது என்னை அழைத்து வெளியே வாருங்கள் என வலியுறுத்தினர். அப்போது தி.மு.க., காங்கிரஸ், வி.சி.க. மட்டுமே கூட்டணி. அப்போது இலங்கையில் ஈழத்தமிழர்கள் படுகொலைக்கு காரணம் தி.மு.க., காங்கிரஸ் கூட்டணி என பேசப்பட்டது. அதனை முறியடித்து தி.மு.க. கூட்டணி வெற்றிப் பெற்றது. இந்த நாட்டுக்கு ஒரு தீங்கு ஏற்பட இருக்கிறது. அதனை தடுக்க நமக்குள் இருக்கும் பிரச்சினைகளை புறம்தள்ளி விட்டு, நாட்டுக்கு வரும் தீங்கை தடுக்க அனைவரும் ஒன்றுபட வேண்டும். ஜெயலலிதா இல்லை எனவே அ.தி.மு.க.வை அழித்து விடலாம். முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் இல்லை திமுகவை அழித்து விடலாம் என பா.ஜ.க. நினைக்கிறது. தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி 16 அடி பாயும் என்பார்கள் அதுபோல் இங்கு தமிழ்நாட்டில் அண்ணன் தளபதி செயல்பட்டு வருகிறார் அவர்கள் எண்ணம் ஒருபோதும் இங்கு எடுபடாது , காரணம் இங்கு கலைஞர் அவர்களின் புதல்வர் மு.க.ஸ்டாலின் இருக்கிறார்.

மீண்டும் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் மாநில கட்சி இருக்காது.

நான் எப்போதும் உங்களுடன் இருப்பேன். மக்களவையில் அனைவருக்குமான குரல் கொடுக்க எனக்கு பானை சின்னத்தில் வாக்களித்து மீண்டும் என்னை வெற்றிப்பெற செய்யுங்கள் என பேசினார்.

நடைபெற்ற செயல்வீரர்கள் கூட்டத்தில் கழக சட்டத்திட்ட திருத்தக்குழு இணை செயலாளர் சுபா. சந்திரசேகர், பெரம்பலூர் மாவட்டப் பொறுப்பாளர் ஜெகதீசன், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, செயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க. சொ.க.கண்ணன், காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினர் சிந்தனைச்செல்வன், முன்னாள் மாவட்டச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன், கழக கொள்கைப் பரப்பு துணை செயலாளர் ச.அ.பெருநற்கிள்ளி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பி. பாலசுப்ரமணியன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் ப.துரைசாமி, மாநில வர்த்தகர் அணி துணை செயலாளர் வி.எஸ்.பெரியசாமி, காங்கிரஸ் கட்சி மாவட்ட தலைவர் ஆ.சங்கர், ம.தி.மு.க. மாவட்டச் செயலாளர் ராமநாதன், கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் உலகநாதன், ம.ஜ.க. மாவட்ட செயலாளர் அக்பர்அலி, சி.பி.எம். இளங்கோவன், வி.சி.க. மாவட்டச் செயலாளர்கள் அன்பானந்தம், வீர. செங்கோலன், கதிர்வளவன், மற்றும் முகமதுஹாஜி, ரகுமான், செல்லதுரை, மாவட்ட துணைச் செயலாளர்கள் மு.கணேசன் சி.சந்திரசேகரன் லதாபாலு, சன். சம்பத், ஒன்றிய கழக செயலாளர்கள் ஆலத்தூர் என். கிருஷ்ணமூர்த்தி, தனசேகர், இரா.கென்னடி, பூ.செல்வராஜ், மதியழகன், இராஜேந்திரன், கோ.அறிவழகன், இரா.மணிமாறன், அசோக சக்ரவர்த்தி, ரெங்க.முருகன், மா.அன்பழகன், ஆர்.கலியபெருமாள், வி.எழில்மாறன், நகர கழக செயலாளர்கள் வெ.கொ.கருணாநிதி, இரா. முருகேசன், பேரூர் கழக செயலாளர்கள் ப.கோபால கிருஷ்ணன், ஜாகிர்உசேன், அல்போன்ஸ் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தெய்வ.இளையராஜா, மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி. லூயிகதிரவன், ஒன்றிய பெருந்தலைவர் பிரபா. செல்லப்பிள்ளை, நகராட்சி தலைவர் சாந்தி கலைவாணன், பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர்.எம்.அன்பழகன், சி.ஆர்.எம்.பொய்யாமொழி, இரா.பாலு, வி.எம். ஷாஜகான், நீலமேகம், பி.எஸ்.ஆர்.பட்டுசெல்வி, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் பானுமதி, மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் மீனா, மாவட்ட மகளிர் அணி துணை தலைவர் இராணி, முன்னாள் நகர் மன்ற தலைவர் விஜயலட்சுமி மற்றும் குன்னம், அரியலூர், செயங்கொண்டம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர்கள், மாநில, மாவட்ட, ஒன்றிய,பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள், அனைத்து அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழகத் தோழர்கள், பொது மக்கள், தோழமைக் கட்சி பொறுப்பாளர்கள் பலரும் கலந்துகொண்டனர்.



திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் திருச்சி தெற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில், கரூர் நாடாளுமன்ற வேட்பாளர் அறிமுகக் கூட்டம் நடைபெற்றது. இதில் திருச்சி தெற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் மண்டலங்கள், நகர, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். கரூர் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் ‘இந்தியா’ கூட்டணி காங்கிரஸ் பேரியக்கத்தின் வெற்றி வேட்பாளர் ஜோதிமணி கழக நிர்வாகிகள் சந்தித்து சால்வை அணிவித்து தன்னை அறிமுகம் செய்துகொண்டு ஆதரவு கோரினார். இந்நிகழ்வில் கரூர் நாடாளுமன்ற தொகுதி பொறுப்பாளர் எம்.எம்.அப்துல்லா எம்.பி, மாவட்டக் கழக நிர்வாகிகள் சபியுல்லா, கேவிந்தராஜ், குணசேகரன், காங்கிரஸ் மாவட்டச் செயலாளர் கோவிந்தராஜ், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் உள்ளாட்சி அமைப்புகளின், பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள் கலந்து கொண்டனர்.